www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com

12 ஆம் வகுப்பு

# அரசு பொதுத்தேர்வு, மே - 2022

பதிவு எண்

பகுதி I

## தமிழ் (விடைகளுடன்)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** [14 × 1 = 14]

**1.** தமிழில் திணைப் பாகுபாடு __________ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
(அ) தொடர்க் குறிப்பு (ஆ) பொருட் குறிப்பு
(இ) எழுத்துக் குறிப்பு (ஈ) சொற் குறிப்பு

**2.** திருக்குறளில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை ______.
(அ) 9 (ஆ) 7 (இ) 3 (ஈ) 5

**3.** "மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய்" இவ்வரிகள் இடம் பெறும் நூல் ______.
(அ) புறநானூறு (ஆ) கலிங்கத்துப்பரணி
(இ) தமிழ் விடு தூது (ஈ) நாலடியார்

**4.** உவமைக் கவிஞர் என்று சிறப்பிக்கப்படுபவர் ______.
(அ) பாரதிதாசன் (ஆ) பாரதியார்
(இ) வாணிதாசன் (ஈ) சுரதா

**5.** உரிமைத்தாகம் என்னும் கதையை எழுதியவர் ______.
(அ) உத்தம சோழன் (ஆ) பூமணி
(இ) ஐராவதம் மகாதேவன் (ஈ) முகமது மீரான்

**6.** 'நடிப்புலகின் சக்கரவர்த்தி' என்று எல்லோராலும் அழைக்கப்படுபவர் ______.
(அ) நம்பியார் (ஆ) ஜெமினி கணேசன்
(இ) முத்துராமன் (ஈ) சிவாஜி கணேசன்

**7.** 'காய்நெல்' – என்பதன் இலக்கணக் குறிப்பு ______.
(அ) வினைத்தொகை (ஆ) பண்புத்தொகை
(இ) உம்மைத்தொகை (ஈ) உவமைத்தொகை

**8.** "தமிழ்க்குயிலே! கூவி வா, வா!" எனக் கூறியவர் :
(அ) சிற்பி பாலசுப்பிரமணியம் (ஆ) பாரதியார்
(இ) சுரதா (ஈ) பாரதிதாசன்

**9.** பகைவராலும் அழிக்க முடியாத அரண் ______.
(அ) அறிவு ஆ) நட்பு (இ) படை (ஈ) செல்வம்

**10.** வேடுவர் தலைவன்______ ஆவான்.
(அ) சுக்ரீவன் (ஆ) குகன்
(இ) இராமன் (ஈ) வீடணன்

**11.** உபாத்தியாயர் என்ற சொல் யாரைக் குறிக்கும்?
(அ) நடிகர் (ஆ) கணக்கர்
(இ) ஆசிரியர் (ஈ) மருத்துவர்

**12.** 'குடிமக்கள் காப்பியம்' என்று அழைக்கப்படும் நூல் ______.
(அ) சிலப்பதிகாரம் (ஆ) கம்பராமாயணம்
(இ) வளையாபதி (ஈ) இரட்சணிய யாத்திரிகம்

**13.** 'இலக்கியத்தில் மேலாண்மை' என்னும் நூலின் ஆசிரியர் :
(அ) பக்தவத்சல பாரதி (ஆ) வெ. இறையன்பு
(இ) தி.க. நடராசன் (ஈ) அய்யப்ப மாதவன்

**14.** அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல் ______.
(அ) முத்துவீரியம் (ஆ) தொல்காப்பியம்
(இ) தண்டியலங்காரம் (ஈ) வீர சோழியம்

### பகுதி - II

#### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** [3 × 2 = 6]

**15.** சூரிய ஒளி பட்டவுடன் நகரம் எவ்வாறு மாறியதாக அய்யப்ப மாதவன் குறிப்பிடுகிறார்?

**16.** எதிர்பாராத விருந்தினராக ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது யாரை?

**17.** சினத்தை ஏன் காக்க வேண்டும்?

**18.** இறைமகனார் அடைந்த துன்பத்தைக் கண்டு மக்கள் எவ்வாறு வருந்தினர்?

#### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** [2 × 2 = 4]

**19.** மொழியின் இயல்பு வழக்குகளைக் கலை வழக்குகளாக மாற்றுபவை எவை?

**20.** குடும்பம் எனும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படையாக இருப்பது எது?

**21.** ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

#### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** [7 × 2 = 14]

**22.** பொருள் வேறுபாடறிந்து தொடரமைக்க :
கான், காண்

**23.** தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்

**24.** பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
புள்ளைக்கு உடம்பு சரியில்லை. மூணு நாளா சிரமப்படுது.

**25.** சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
(அ) பலகை (ஆ) கோவில்

**26.** தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன

**27.** ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
(அ) அறுத்து (ஆ) கண்டான்



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



**28.** ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
(அ) முன்னுடை (ஆ) பூம்பாவாய்

**29.** கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.
முன் <

**30.** கலைச்சொல்லாக்கம் தருக.
(அ) Mobile Banking (ஆ) Biography

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** [2 × 4 = 8]

**31.** 'தன்னேர் இலாத தமிழ்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**32.** சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

**33.** வள்ளலார் கந்த கோட்டத்து இறைவனிடம் வேண்டுவதை தெய்வமணி மாலை பாடல் வழி விளக்குக.

**34.** நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** [2 × 4 = 8]

**35.** "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை" – இப்பாடலில் ஒலிக்கோலங்களின் பண்பை விளக்குக.

**36.** 'இன்றைய கூட்டுக் குடும்பம், பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே' – விளக்குக.

**37.** பண்டைக்கால பள்ளிக்கூடங்களில் பின்பற்றப்பட்ட குறிப்பிடத்தக்க நடைமுறைகள் யாவை?

**38.** உழவுத்தொழிலில் மேலாண்மை குறித்து நீவிர் அறிந்தனவற்றை எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** [3 × 4 = 12]

**39.** (அ) உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது
– இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**40.** இலக்கிய நயம் பாராட்டுக.
(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்! – **கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை**

**41.** பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
(அ) யானைக்கும் அடி சறுக்கும்

(அல்லது)

(ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்

**42.** (அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) செவியறிவுறூஉத் துறையைச் சான்றுடன் விளக்குக.

**43.** தமிழாக்கம் தருக.
1. Learning is a treasure that will follow its owner everwhere.
2. A new language is a new life.
3. Knowledge of languages is the doorway to wisdom.
4. The limits of my language are the limits of my world.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** [3 × 6 = 18]

**44.** (அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழிநின்று நிறுவுக.

**45.** (அ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது – எவ்வாறு? விளக்குக.

**46.** (அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) உங்கள் பகுதியில் வாழ்ந்து வரும் கலைஞர் ஒருவரை நேரில் கண்ட அனுபவத்தை விளக்குக.

## பகுதி - V

**47. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** [4 + 2 = 6]

(அ) "இதில் வெற்றி பெற" என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ள 'விண் வேறு' எனத் தொடங்கும் மனப்பாட பாடலை அடிபிறழாமல் எழுதுக.

(அல்லது)

(ஆ) 'அரிது' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

☆ ☆ ☆

## விடைகள்

1. (அ) பொருட்குறிப்பு
2. (அ) 9
3. (இ) தமிழ் விடு தூது
4. (ஈ) சுரதா
5. (ஆ) பூமணி
6. (ஈ) சிவாஜி கணேசன்
7. (அ) வினைத்தொகை
8. (அ) சிற்பி பாலசுப்பிரமணியம்
9. (அ) அறிவு
10. (ஈ) குகன்
11. (இ) ஆசிரியர்
12. (அ) சிலப்பதிகாரம்
13. (ஆ) வெ. இறையன்பு
14. (இ) தண்டியலங்காரம்

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**15. மழை நின்று சூரியன் தோன்றியவுடன் ஏற்பட்ட மாற்றங்கள்:**

(i) பட்டை தீட்டிய வெள்ளை வைரம் போன்று நகரம் ஒளிர்ந்தது.

(ii) சூரிய ஒளிக்கதிர்கள் நீர்நிலைகளில் இருந்து நீரை உறிஞ்சின.

(iii) சுவர் எங்கும் இருந்த நீர்ச்சுவடுகள் அழிந்தன.

(iv) மரங்களில் இருந்த இலைகள் மீதமிருந்த மழைநீரை உதறின.

(v) பறவைகள் வெயிலைக் கண்டு, குளிர்நீங்கிய உற்சாகத்தில் இன்னிசை பாடின.

**16.** ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு போன்ற உணர்வுகளை எதிர்பாராத நிகழ்வுகளாக ஜலாலுத்தீன் ரூமி உருவகப்படுத்தியுள்ளார்.

**17.** ஒருவர் தன்னைத்தான் காத்துக்கொள்ள விரும்பினால், சினம் வாராமல் காத்துக் கொள்ள வேண்டும்; காக்காவிட்டால், சினம் நம்மையே அழித்துவிடும்.

**18.** இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் புலம்பியவிதம்:

(i) 'இத்தனைக் கொடுமைகளுக்குப் பிறகும் இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே!

(ii) வானம் இடிந்து விழவில்லையே!

(iii) கடல்நீர் வற்றிப் போகவில்லையே!

(iv) இன்னும் இந்த உலகம் அழியாமல் தாமதிப்பது எதனால்?' என்று கூறி புலம்பினர்.

**19.** (i) உவமம் (ii) உருவகம் (iii) எச்சம் (iv) குறிப்பு (v) உள்ளுறை (vi) இறைச்சி

**20.** குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் எனும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. குடும்பம் தொடங்கிக் குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என்ற அமைப்பு வரை விரிவு பெறுகிறது. ஆதலின் குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படையாகும். குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே. குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே செயல்படுகின்றன.

**21.** (i) ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியில் பல பேதங்கள் உண்டு.

(ii) எழுத்தாணியை ஊசி என்றும் அழைப்பார்கள். மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி என்பன எழுத்தாணியின் வகைகள் ஆகும்.

**22.** கான் – காண்

பலவகையான மரங்கள் செறிந்த இடம் **கான்** அவற்றைக் **காண்**பதால் மனதில் இனிமை உண்டாகும்.

(கான்– காடு, காண் – பார்)

**23.** பனை **ஓலை**யால் கூரை **வேய்ந்திருந்தனர்.**

**24.** பிள்ளைக்கு உடம்பு சரியில்லை, மூன்று நாள்களாக சிரமப்படுகிறான்.

**25.** (அ) பலகை

பலகையால் ஆன மேசையில் உணவு உண்டனர்.

பல கைகள் ஒன்றிணைந்து வெற்றியைத் தமதாக்கின.

(ஆ) கோவிலுக்குள் சென்று வந்தால் மனதுக்கு நிம்மதி கிடைக்கிறது.

கோ + வில்லானது – குறிதவறாமல் எதிரியைத் தாக்கும்.

(கோவில் – அரசனுடைய வில்)

**26.** வானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

**27.** அ) அறுத்து – அறு + த் + த் + உ

அறு – பகுதி

த் – சந்தி

த் – இறந்தகால இடைநிலை

உ – வினையெச்ச விகுதி

ஆ) காண் (கண்) + ட் + ஆன்

காண் – பகுதி 'கண்' எனக் குறுகியது விகாரம்

ட்– இறந்தகால இடைநிலை

ஆன்– ஆண்பால் வினைமுற்று விகுதி

**28.** அ) (i) '**தனிக் குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்**' என்ற விதிப்படி **முன் + ன் + உடை** என்றானது.

(ii) '**உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**' என்ற விதிப்படி புணர்ந்து **முன்னுடை** என்றானது.

**29.** முன் – அவன் முன்வந்து கூறினான்.

அவன்முன் வந்து கூறினான்.

**30.** (அ) அலைபேசி வழி வங்கி முறை

(ஆ) வாழ்க்கை வரலாறு

**31.** (i) **இடம் :** 'தண்டியலங்காரம்' என்ற அணியிலக்கண நூலில் பொருளணியில் இந்த அடியானது இடம் பெற்றுள்ளது.

(ii) **பொருள் :** உலகின் புற இருள் போக்கும் வெங்கதிர்போல் அன்றி மக்களின் அக இருளைப் போக்கித் தன்னிகர் அற்றதாகத் தமிழ் விளங்குகிறது.

(iii) **விளக்கம் :** உலகின் இருளான புற இருளை அகற்றுவது சூரியன். மக்களின் அறியாமை என்னும் இருளை அகற்றுவது தமிழ். சூரியன் இல்லாவிட்டால் உலகின் இயக்கம் நடைபெறாது. தமிழ்மொழி இல்லாவிட்டால் மக்களின் வாழ்க்கை பண்பட்டு விளங்காது. எனவேதான் நன்றி மறவாப் பண்புடைய சான்றோர்கள் சூரியனையும் தமிழையும் வணங்குகிறார்கள்.

சூரியனுக்கு உவமையாகக் கூற மின்னல் இருக்கிறது. ஆனால் தமிழுக்கு நிகரான உவமையைக் கூற எதுவுமேயில்லை. எனவே தான் 'தன்னேர் இலாத தமிழ்' என்று பெருமையுடன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**32.** (i) இராமன், தன் தந்தையின் நண்பனான கழுகு வேந்தன் சடாயுவைத் தன் தந்தையாகவே கருதி, மகன் நிலையில் அவருக்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்தான்.

(ii) "எப்படிப்பட்ட சிறப்பான விறகுகள் இவை" என்று கண்டவர் வியக்கும்படியான கரிய அகில் கட்டைகளையும் சந்தனக் கட்டைகளையும் இராமன் கொண்டுவந்து வைத்தான். தேவையான அளவு தருப்பைப் புற்களையும் ஒழுங்குபட அடுக்கினான். பூக்களையும் கொண்டுவந்து தூவினான். மணலினால் மேடையைத் திருத்தமாக அமைத்தான். நன்னீரையும் எடுத்து வந்தான். இறுதிச் சடங்கு செய்யப்படக்கூடிய மேடைக்குத் தன் தந்தையாகிய சடாயுவைப் பெரிய கைகளில் தூக்கிக் கொண்டு வந்தான்.

இவ்வாறாக சடாயுவைத் தந்தையாக ஏற்று இராமன் தன் கடமைகளை ஆற்றினான்.

**33.** (i) ஒரு நெறிப்பட்ட மனத்துடன் இறைவனுடைய மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்.

(ii) பெருமை சான்ற இறைவனின் புகழையே தான் எப்பொழுதும் பேச வேண்டும்.

(iii) சிறந்த வாழ்வியல் நெறியை தான் பின்பற்றுவதற்கு இறைவன் அருள் வேண்டும்.

(iv) இறைவனை என்றும் மறக்காதிருக்க வேண்டும்.

(v) மதியும் (அறிவும்), இறைவனின் கருணையாகிய நிதியும், நோயற்ற வாழ்வும் உடையவனாக தான் இருக்க வேண்டும்.

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



(vi) உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர் உறவு தன்னைப் பற்றாதிருக்க வேண்டும்.

(vii) பொய் பேசாதிருக்க வேண்டும்.

(viii) மதமான பேய் தன்னை அணுகாதிருக்க வேண்டும்.

(ix) துறவுக்கு எதிரான பெண்ணாசையை, தான் மறக்க வேண்டும்.

**34. நாட்டிய அரங்கின் அமைப்பு :**

(i) திறம்படக் கற்றுணர்ந்த சிற்ப நூலாசிரியரால் சொல்லப்பட்ட இயல்புகளில் இருந்து மாறுபடாத நல்ல நிலத்தை ஆடல் அரங்கிற்காகத் தேர்ந்தெடுத்தனர்.

(ii) பொதிகை மலை போன்ற மலைகளிலே நீண்டு வளர்ந்த மூங்கில்களிலே ஒன்றுக்கு ஒன்று இடையே ஒரு சாண் அளவு கணுக்களைக் கொண்ட மூங்கிலைக் கொண்டு வந்தனர். நூல்களில் கூறப்பட்ட முறையாலே அரங்கம் அமைத்தனர்.

(iii) தம் கைப்பெருவிரலில் இருபத்து நான்கு அளவினைக் கொண்டதாக அம்மூங்கிலை வெட்டினர். அதை அரங்கம் அமைக்கும் கோலாகக் கொண்டு அதில் ஏழு கோல் அகலமும் எட்டுக்கோல் நீளமும் ஒருகோல் உயரமும் உடையதாக நாட்டிய அரங்கத்தை அமைத்தனர்.

(iv) அரங்கில் தூணிற்கு மேல் வைத்த உத்திரப் பலகைக்கும் தளத்தில் இருக்கும் பலகைக்கும் இடையே, இடைவெளி நான்கு கோல் அளவாக இருந்தது. அரங்கின் உள்ளே செல்லவும் வெளியே வரவும் ஏற்ற அளவுகளுடன் இரு வாயில்கள் அழகாக அமைக்கப்பட்டிருந்தன.

(v) மேல்நிலை மாடத்தில் ஐம்பூதங்களைச் சித்தரித்து வைத்தனர். தூண்களின் நிழலானது, அவையிலும் நாடக அரங்கிலும் விழாதபடி நல்ல அழகான நிலைவிளக்குகளை நிறுத்தினர்.

**35.** எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் தான் தொடங்குகிறது. மொழி சார்ந்த கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும் தான் பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன. சிறு சிறு வாக்கியங்கள், பேசுவோரின் அறுதியிட்டுப் பேசும் தன்மையைக் காட்டுகின்றன.

“படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக”

என்ற புறநானூற்றுப் பாடல்

இப்படிப் பல, உயிர் ஒலிகள் – குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பி வருகின்றன.

**36. பண்டைய விரிந்த குடும்பம் :**

(i) சங்க காலத்தில் தனிக்குடும்ப அமைப்பு விரிவுபெற்று கணவன் மனைவியுடன் பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன் வாழும் விரிந்த குடும்ப முறை இருந்தது.

(ii) கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்ப முறையை ஒக்கூர் மாசாத்தியாரின் புறநானூற்றுப் பாடல் கூறுகிறது.

(iii) சங்ககாலத்தில் செவிலித்தாயும் அவளது மகளாகிய தோழியும் குடும்ப அமைப்பில் முதன்மைப் பங்கு பெற்றிருந்தனர்.

(iv) இல்லற வாழ்வின் இறுதி காலத்தில் பெருமைகள் நிறைந்த மக்களுடன் நிறைந்து, அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து தலைவனும், தலைவியும் வாழ்ந்தனர். விரிந்த குடும்பம் பற்றிய கருத்தினை தொல்காப்பியமும் பதிவு செய்கிறது. தொன்மை மிக்க இக்குடும்ப அமைப்பு முறை தமிழ்ச் சமூகத்தின் அடையாளப் பெருமிதமாகும்.

**37. பள்ளிக்கூடங்களில் பின்பற்றப்பட்ட நடைமுறைகள் :**

**வித்தியாரம்பம் :**

பண்டைக்காலத்தில் பிள்ளைகளின் ஐந்தாம் பிராயத்தில் வித்தியாரம்பம் ஆகிறது. பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் வைக்கும் காலம் ஒரு பெரிய விசேட நாளாகக் கொண்டாடப் பெறும். ஏட்டின்மீது மஞ்சள் பூசிப் பூசித்துப் பையனிடம் கொடுத்து வாசிக்கச் செய்வார்கள். உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுக்க மாணாக்கன் அதனைப் பின்பற்றி சொல்லுவான்.

**எழுத்துப்பயிற்சி:**

பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். அதனால் அவர்களுடைய எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமைந்தன. உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத அதன் மேல் பிள்ளைகள் எழுதுவார்கள். எழுத்துகள் ஒன்றோடொன்று படாமல் வரிகோணாமல் பழைய காலத்தில் எழுதி வந்தார்கள். மாணாக்கர்களுக்கு எழுதும் பழக்கம் நன்றாக உண்டாக வேண்டுமென்று ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் அவர்களைத் தனித்தனியே ஏடுகளில் தாம் மேலே எழுதி அதைப்போல் எழுதிவரச் சொல்வார்கள்.

**38.** வேளாண்மைக்குள்ளும் மேலாண்மைக் கூறுகள் உண்டு.

(i) சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல்,

(ii) உரிய நேரத்தில் விதைத்தல்,

(iii) நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல்,

(iv) அறுவடைக்குப்பின் பாதுகாத்தல்,

(v) உரிய விலை வரும்வரை இருப்பு வைத்தல் என்று ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வும், பொறுப்புணர்வும், நிர்வாக நெறியும், இணைந்தால்தான் வேளாண்மை செழிக்கும்.

**39.** (அ) **அணி இலக்கணம் :** உவமை, உவமேயம் இவ்விரண்டையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படுமாறு வரப்பாடுவது உவமையணி ஆகும்.

(i) **உவமை :** உருவுகண்டு எள்ளாமை

(ii) **உவமேயம் :** உருள்பெருந்தேர்க்கு அச்சாணி

(iii) **விளக்கம் :** ஒருவரின் தோற்றத்தைக் கண்டு இகழக்கூடாது. பெரிய தேர்க்குச் சிறு அச்சாணி எவ்வளவு இன்றியமையாததோ அதைப்போல் உருவத்தைப் பார்த்து அவர் செயலை நாம் குறைவாக மதிப்பிடக்கூடாது.

(அல்லது)

(ஆ) இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி ‘**நிரல்நிறையணி**’ ஆகும்.

**அணி விளக்கம்:** சொற்களையும் பொருள்களையும் அந்தந்த வரிசைப்படி அமைத்து பொருள் கொள்ள வைத்தல் நிரல்நிறை அணியாகும்.

**எடுத்துக்காட்டு:**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

**அணிப்பொருத்தம்:** அன்பு → பண்பு ; அறன் → பயன்

அன்பு என்பதே பண்பாகும். அறனே அதன் பயனாகும்.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**40. திரண்ட கருத்து :**

| திரண்ட கருத்துப் பாடலின் முழுமையை உணர்த்தும் |
|---|

இந்த மண்ணில் பிறந்ததால் மட்டுமே யாருக்கும் பெருமை வராது. உனக்கு சிறப்பு வேண்டுமென்றால் உன்னுடைய செய்கைகள் நல்லவையாக இருக்க வேண்டும். மக்களுக்கு நன்மை செய்பவர்களைத்தான் இந்த நாட்டில் மேல்சாதிக்காரர்கள் என்பர். தீமை செய்பவர்களைப் பார்த்தால் தீண்டத்தகாதவர்களைப் போல அனைவரும் ஒதுங்கிப் போவார்கள்.

**மையக் கருத்து :**

| மனதைத் தொடுவது மையக் கருத்து |
|---|

நன்மை செய்பவர்களை இந்த நாடு போற்றும், தீமை செய்பவர்களை ஒதுக்கும்.

**மோனைத் தொடை :**

| காட்டிற்கு அழகு யானை<br>கவிதைக்கு அழகு மோனை |
|---|

பிறப்பினால் - பெருமை, சிறப்பு – செய்கை, நன்மை – நாடும், தின்மை - தீண்ட

**எதுகைத் தொடை :**

| குளிருக்கு அழகு உதகை<br>கவிதைக்கு அழகு எதுகை |
|---|

பிறப்பினால் – சிறப்பு, நன்மை – தின்மை

**இயைபுத் தொடை :**

| செய்யுளின் இயைபு<br>படிப்போர்க்கு வியப்பு |
|---|

வாராதப்பா – வேண்டுமப்பா,

மேற்குலத்தார் – ஒண்ணாதார்

**அணிநயம் :**

| உடலுக்கு ஊக்கம் தருவது கனி<br>கவிதைக்கு ஊக்கம் தருவது அணி |
|---|

இயல்பு நவிற்சி அணி.

**41.** (அ) **பழமொழி விளக்கம் :**

எப்போதும் வெற்றி பெறுபவர் ஏதாவது ஒரு நேரத்தில் தோல்வி அடையக் கூடும். இதனை 'யானைக்கும் அடி சறுக்கும்' என்பார்கள்.

**வாழ்க்கை நிகழ்வு :**

தியா பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவி. நன்கு படித்து வகுப்பில் முதல் மாணவியாக வருவாள். அனைத்து போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றி பெறுவாள். ஆண்டு இறுதி தேர்வு நடந்து கொண்டிருந்தது. அவளுக்கு திடீரென்று உடல்நிலை சரியில்லை. அவளால் தேர்வுக்கு படிக்க முடியவில்லை. அதனால் சரியாக தேர்வும் எழுத முடியவில்லை. எப்போதும் அனைத்து பாடங்களிலும் முதல் மதிப்பெண் பெற்ற தியா இந்தத் தேர்வில் குறைந்த மதிப்பெண் பெற்றாள். இது 'யானைக்கும் அடி சறுக்கும்' என்பது போல் உள்ளது.

**நீதி :**

நாம் எப்போதும் வெற்றி பெற்று கொண்டே இருப்போம் என்ற எண்ணம் இருக்கலாம். ஆனால் சில நேரங்களில் தோல்வியையும் அடையக் கூடும். இதுவே "யானைக்கும் அடிசறுக்கும்" என்ற பழமொழி உணர்த்தும் நீதியாகும்.

(அல்லது)

(ஆ) **பழமொழி விளக்கம் :**

ஒருவர் எச்சூழலிலும் பொய் சொல்லமாட்டார். பிறர் பொருளைக் கவர நினைக்கமாட்டார். சீற்றங்களால் இவ்வுலகமே அழியும் நிலை வரினும் தன் நிலையிலிருந்து மாறாமல் அவருடைய கொள்கையில் நிலையாக இருப்பார். இதனை 'ஊழி பெயரினும் தாம் பெயரார்' என்று கூறுவர்.

**வாழ்க்கை நிகழ்வு :**

விருதாச்சலத்தில் பிரியா என்ற பெண் வாழ்ந்து வந்தாள். நன்கு படித்த பெண். இளகிய மனம் கொண்டவள். வறுமையிலும் உதவி என்று கேட்டால் தவறாமல் செய்பவள். அவள் ஒருநாள் கோயிலுக்கு சென்று கொண்டிருந்தாள். வழியில் ஒரு பை கிடந்தது. அதை எடுத்து பார்த்தாள். அதில் பணம் மற்றும் சில ஆவணங்கள் இருந்தன. அப்போது அவளுக்கு பணத்தேவை இருந்தது. இந்த பணம் அவள் தேவையை நிறைவேற்றும். ஆனால் அவள் அதை எடுத்துக் கொள்ளவில்லை. காவல் நிலையம் சென்றாள். பணத்துடன் இருக்கும் அந்த பையைக் கொடுத்தாள். பையில் உள்ள ஆவணத்தில் வீட்டு முகவரி இருந்தது. அதைப் பார்த்து உரியவர்களை வரவழைத்து காவலர்கள் ஒப்படைத்தனர். தன் வறுமையிலும் பிரியா நேர்மையாக நடந்து கொண்டாள்.

**நீதி :**

நாம் எந்தச் சூழலில் இருந்தாலும் பொய் சொல்லக்கூடாது. பிறர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது. உலகம் அழியும் நிலை வந்தாலும் தன் நிலையில் இருந்து மாறக்கூடாது என்பதே இப்பழமொழி உணர்த்தும் நீதியாகும்.

**42.** (அ) பாடு + ஆண் + திணை = பாடாண்திணை. பாடப்படும் ஆண்மகனது புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

**சான்று :**

வாயி லோயே! வாயிலோயே!

வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித் தாம்

**விளக்கம் :** ஔவையாரின் பாடலில் நெடுமான் அஞ்சியின் வீரத்தைப் பற்றியும், அவன் கொடைச் சிறப்பைப் பற்றியும் புகழ்ந்து கூறப்பட்டுள்ளதால் இப்பாடல் பாடாண்திணைக்கு உரியது என்பதை அறியலாம்.

(அல்லது)

(ஆ) **சான்று :**

யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான், உலகமும் கெடுமே.

**விளக்கம் :**

பாண்டியன் அறிவுடைநம்பி தன் குடிமக்களிடம் வரி வசூலிக்கும் முறை நாட்டு மக்களுக்கு பெரும் துன்பத்தைத் தந்தது. அரசனுக்குத் துணையாக இருக்க வேண்டிய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அரசனுக்கு அறிவுரை கூறி நன்னெறிப்படுத்தவில்லை. இந்நிலையில், அரசனுக்கு அறிவுரை சொல்லக்கூடிய உயர்நிலையில் இருந்த பிசிராந்தையாரிடம் மக்கள் முறையிட்டனர். அவர் அறிவுடை நம்பியிடம் சென்று, மக்கள் துன்பப்படாத வகையில் வரி வசூலிப்பதைப் பற்றி அறிவுரை வழங்கினார். யானை தான் புகுந்த நிலத்தில் தானும் உண்ணாமல் பிறருக்கும் பயன்படாமல்

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



வீணாக்குவது போல, முறையான வரிவசூல் இல்லாவிட்டால், அரசன் தானும் பயனடைய மாட்டான், நாட்டு மக்களும் துன்புறுவர் என அறிவுறுத்துகிறார்.

அரசன் செய்யவேண்டிய கடமைகளை முறை தவறாமல் செய்யுமாறு அவனுக்கு அறிவுறுத்தல் **செவியறிவுறூஉ** துறை எனப்பட்டது.

**43.** 1. கல்விச் செல்வம், கற்றோருக்கு செல்கின்ற இடமெல்லாம் சிறப்பைத் தரும்.

2. புதிய மொழி என்பது புதிய வாழ்க்கை போன்றது.

3. பன்மொழி அறிவானது, ஞானத்தின் நுழைவாயில் ஆகும்.

4. என்னுடைய மொழியின் எல்லையே என்னுடைய உலகத்தின் எல்லை ஆகும்.

**44.** (அ) **முன்னுரை:**

இவ்வுலகில் எத்தனையோ மொழிகள் தோன்றின. அவற்றுள் பல அழிந்துவிட்டன. ஆனால் நம் தமிழ்மொழி பல ஊழிக்காலங்களைக் கடந்தும் நிலைத்து நிற்கிறது. அத்தகு பெருமைமிக்க தமிழ் மொழியினை, அதன் பெருமையைப் பேசாத கவிஞர்கள் இல்லை எனக் கூறலாம். கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழின் பெருமைகளாகக் கூறியவற்றை இங்குக் காண்போம்.

**கவிஞர்களுக்குத் துணையாய் விளங்கும் தமிழ் :**

செந்நிறக் கதிர்களை உடைய கதிரவன் மாலைநேரத்தில் மலையின் உச்சியில் சென்று மறைகின்ற காட்சியானது, செந்நிறப் பூக்காடு ஆகாயம் முழுமையும் நிறைந்திருப்பது போல் உள்ளது.

உழைத்துச் சிவந்த தொழிலாளர்களின் கைகள், சிவந்த நிறமுடைய மாலை நேரத்து வானம் போல் உள்ளது.

தொழிலாளர்களின் பருத்த தோள்கள் மீது பூத்திருக்கும் வியர்வைத் துளிகள் முத்துக்கள் போன்று உள்ளன. இக்காட்சிகளை எல்லாம் வியந்து பாடுவதற்கு செந்தமிழாகிய உன்னைவிட்டால் வேறு பொருத்தமான துணை உண்டோ? கூறிடுவாயாக! எனக் கேட்கிறார் கவிஞர்.

**தமிழின் பெருமைகள் :**

கவிஞர்களின் உள்ளத்திலே பொங்கிப் பெருகி வரும் கவிதை உணர்வுகளுக்கு உயிராக விளங்கும் முத்தமிழே! தொன்மைக் காலத்தில் பாண்டியரின் சங்கத்தில் அரசியாக, அரியணையில் வீற்றிருந்தாய்! பாரி முதலான வள்ளல்கள் பலரை இவ்வுலகிற்கு அளித்து அறம் வளர்த்தாய்!

**தமிழ்த்தாயே வருக!:**

மீண்டும் அந்தப் பொற்காலம் அமைவதற்கு தமிழ்க்குயிலாக மாறி மெய்சிலிர்க்க இன்னிசை பாடி வருக! தன்னை அடைத்து வைத்துள்ள கூண்டினை தகர்த்து எறிந்து விட்டு வீரத்துடன் வெளியே வரும் சிங்கம் போன்று உன் வளர்ச்சிக்குத் தடையாய் இருப்பவைகளை உடைத்து எறிந்து விட்டு, பொதிகைமலையில் வளர்ந்த தென்தமிழே வருக!

**முடிவுரை:**

கால மாற்றங்களுக்கு ஏற்ப தன்னைப் புதுப்பித்துக் கொள்வதுடன், தன்னுடைய பழம்பெருமைகளையும் இழந்துவிடாமல் தமிழ் மொழி தரணியெங்கும் புகழ்மணம் வீச வேண்டும் என்பதைக் கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார்.

(அல்லது)

(ஆ) **முன்னுரை :**

தெய்வநூலாய் போற்றப்படும் திருக்குறளில் அறிவுடைமை என்னும் அதிகாரம் வாழ்வின் உயர்வுக்கு எவ்வாறு துணைநிற்கிறது என்பதை இக்கட்டுரை வழிநின்று காண்போம்.

(i) **அறிவு அரண் :** அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும். அது பகைவராலும் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணாகும்.

அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.

(ii) **தீமை ஒழித்து நன்மை தருவது அறிவு :** மனத்தை அது போகும் போக்கில் செல்லவிடாமல், தீமையிலிருந்து விலக்கி, நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.

சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

(iii) **மெய்ப்பொருள் காண்பது அறிவு :** எப்பொருளை யார் யார் சொல்ல கேட்டாலும் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

(iv) **உலகத்தின் உயர்ந்த நெறி :** உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ, அந்நெறியில் தானும் உலகத்தோடு இணைந்து செல்வதே அறிவாகும்.

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

(v) **முன்கூட்டியே அறிவும் அறிவு :** பின்பு வரப்போவதை முன்பே அறிந்து காத்துக்கொள்ளும் வல்லமைகொண்ட அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

**முடிவுரை :**

வாழ்வின் உயர்வுக்கு அறிவே துணை நிற்கும் என்பதை அறிவுடைமை என்னும் அதிகாரத்தில் இடம்பெற்ற ஐந்து குறள்களின் மூலம் அறிந்தோம்.

**45.** (அ) **முன்னுரை:**

பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைப் பற்றி ஆய்வு செய்வதே இதன் நோக்கமாகும்.

**வித்தியாரம்பம் அல்லது கல்வித் தொடக்கம்:**

பண்டைக்காலத்தில் பிள்ளைகளின் ஐந்தாம் பிராயத்தில் வித்தியாரம்பம் ஆகிறது. பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் வைக்கும் காலம் ஒரு பெரிய விசேட நாளாகக் கொண்டாடப் பெறும். ஏட்டின்மீது மஞ்சள் பூசிப் பூசித்துப் பையனிடம் கொடுத்து வாசிக்கச் செய்வார்கள். உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுக்க மாணாக்கன் அதனைப் பின்பற்றி சொல்லுவான்.

**எழுத்துப்பயிற்சி:**

பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். அதனால் அவர்களுடைய எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமைந்தன. உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத அதன் மேல் பிள்ளைகள் எழுதுவார்கள். எழுத்துகள் ஒன்றோடொன்று படாமல் வரிகோணாமல்

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



பழைய காலத்தில் எழுதி வந்தார்கள். மாணாக்கர்களுக்கு எழுதும் பழக்கம் நன்றாக உண்டாக வேண்டுமென்று ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் அவர்களைத் தனித்தனியே ஏடுகளில் தாம் மேலே எழுதி அதைப்போல் எழுதிவரச் சொல்வார்கள்.

**மனனப்பயிற்சி:**

தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதிநூல்கள் முதலியன பாடமாக இருந்தன. அவற்றை அக்கால மாணவர்கள் பயின்றனர். கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று, நெல் இலக்கம் முதலிய வாய்பாடுகளைக் கட்டாயம் மனனம் செய்தனர். வியாபாரம் செய்வதற்கும் கோவிலில் பணி செய்வதற்கும் ஏற்றவாறு அமைந்த கணிதமுறை கட்டாயமாகக் கற்பிக்கப்பட்டதைக் கதைப்பாடல்கள் உணர்த்துகின்றன.

**வாதம் புரிதல் :**

மிகச் சிறந்த நூற்பயிற்சியுடைவர்கள் அரசவைகளில் வாதுபுரிந்து தம் கல்வித் திறமையை வெளிப்படுத்தினர் என மதுரைக்காஞ்சி எடுத்துக் கூறுகிறது. வாதம்புரியும் பழக்கம் பாடசாலைகளிலிருந்தே வளர்ச்சியுற்று வந்தது.

**சாந்துணையும் கற்றல்:**

பல நூல்களையும் பள்ளிக்கூடத்தில் பயின்றதோடு நில்லாமல் வாழ்நாள் முழுதும் நம் நாட்டவர் படித்து வந்தனர். பள்ளிக்கூடத்திலிருந்து கற்கும் காலம் கடந்த பின்னர், பழைய காலத்தவர்கள் பின்பும் எங்கெங்கே கலைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இருந்தார்களோ, அங்கங்கே சென்று அவர்களிடம் தாம் முன்பு கல்லாதவற்றைக் கற்று வந்தார்கள்.

**ஓதற்பிரிவு:**

இல்லறம் நடத்தும் காலத்தில் கூட, வேற்று நாட்டுக்குச் சென்று அங்கங்கே உள்ளாருக்குத் தம்முடைய கல்வியைக் கற்பித்தும் வாதம் புரிந்து வென்றும், தாம் முன்பு அறியாதவற்றைக் கற்றும் வந்தனர்.

**முடிவுரை:**

காலத்தின் வேகம் அந்தப் பழைய காலத்துப் பள்ளிக்கூடங்களை மாற்றியமைத்துவிட்டாலும் அவற்றால் உண்டான நற்பயன்களையும், அவற்றில் படித்த பேரறிஞர்கள் நமக்கு ஈட்டி வைத்துள்ள நூற் செல்வத்தையும் நினைக்கும்போது, நாம் பெருமிதம் கொள்கிறோம்.

(அல்லது)

(ஆ) **முன்னுரை :**

குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது என்பதனை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை :**

குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் எனும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. குடும்பம் தொடங்கிக் குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என்ற அமைப்பு வரை விரிவு பெறுகிறது. ஆதலின் குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படையாகும். குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே. குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே செயல்படுகின்றன.

குடும்பம் எனும் சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் பயின்று வருகிறது. குடும்பு எனும் சொல் கூடி வாழுதல் என்று பொருள்படுகின்றது. குடும்பு எனும் சொல்லுடன் 'அம்' விகுதி சேர்த்துப் பொருண்மை விரிவாக்கமாக 'குடும்பம்' எனும் சொல் அமைந்துள்ளது.

"இரவுக்குறியே... காலையான" (பொருளியல் - 129) எனும் தொல்காப்பிய நூற்பா, 'இல்', 'மனை' ஆகிய இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடுகின்றது.

**வாழிடம் :**

சங்க இலக்கியத்தில் மேலும் பல சொற்கள் உள்ளன. இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலிய சொற்கள் குடும்பங்களின் வாழ்விடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டுகின்றன. மருதத்திணைப் பாடல் ஒன்றில் மகளிர் 'தம்மனை', 'நும்மனை' என மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் போக்கினைக் காணமுடிகிறது.

**மணந்தகம் :**

மணம் புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டமே 'மணந்தகம்' எனப்படுகிறது. முதல் குழந்தை பிறக்கும் வரை உள்ள காலகட்டத்தை இந்நிலை குறிக்கிறது. தனிக்குடும்ப உருவாக்கத்தின் தொடக்க நிலையாக இது அமைகிறது.

**தாய்வழிக் குடும்பம்:**

தாய்வழிக் குடும்பங்களில் பெண்களே குலத் தொடர்ச்சிக்கு உரியவர்களாக இருப்பதால் பெண் குழந்தைகளின் பேறு முதன்மையாக விரும்பப்பட்டது. தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.

**தனிக்குடும்பம்:**

தனிக்குடும்பம் தோன்றுவதற்கான தொடக்கநிலைக் குடும்பங்கள் பற்றிச் சங்க இலக்கியங்கள் மிகுதியாகப் பேசியிருக்கின்றன. தாய், தந்தை, குழந்தை மூவருமுள்ள தனிக்குடும்பம் மிகவும் நெருக்கமானது என்பதால் இது தொடக்கநிலை/ எளிய/ நெருக்கமான குடும்பம் எனப்படும்.

**விரிந்த குடும்பம்:**

சங்க காலத்தில் தனிக்குடும்ப அமைப்பு விரிவு பெற்று இவர்களுடன் பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன் வாழும் "விரிந்த குடும்ப" முறையையும் காண முடிகிறது. இல்லற வாழ்வின் இறுதி காலத்தில் பெருமைகள் நிறைந்த மக்களுடன் நிறைந்து, அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே இல்வாழ்வின் பயனாகும் எனச் சங்ககால மக்கள் எண்ணினார்கள். விரிந்த குடும்பம் பற்றி இக்கருத்தினை தொல்காப்பியமும் பதிவு செய்கிறது.

**முடிவுரை :**

சங்ககாலச் சமூகம், குடும்பம் என்ற அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருந்த நிலையைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இன்றைய சமூக அமைப்பும் கூட்டுக் குடும்பம், தனிக்குடும்பம் என்ற அலகுகளைக் கொண்டதாக இருக்கின்றது. தொன்மைமிக்க இக்குடும்ப அமைப்பு முறை தமிழ்ச் சமூகத்தின் அடையாளமாகும்.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
www.surabooks.com



**46.** (அ) **முன்னுரை:**

பாரதியின் கடிதங்கள் அனைத்தும் நம்மிடம் நேரில் பேசுவது போல இருப்பது அவரது நடையழகின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாகும். பரலி சு. நெல்லையப்பருக்கு அவர் எழுதிய கடிதத்தில் மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை வெளிப்படுத்தியுள்ளார்.

**மொழிப்பற்று :**

பிறமொழிகளை அறிந்து கொண்டு, அம்மொழிகளில் வெளிவரும் பத்திரிகைகளில் உள்ள புதுமைகளைத் தமிழ்மொழியில் புகுத்த வேண்டும்.

புதிய செய்தி, புதிய யோசனை, புதிய உண்மை, புதிய இன்பம் ஆகியவற்றை தமிழ் மொழியில் கொண்டு வருவதன் மூலம் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அந்தப் பள்ளிக்கூடங்களில் நவீன கலைகளை மாணவர்களுக்கு பயிற்றுவித்து அவர்கள் வளர்ச்சிக்குத் துணைபுரிய வேண்டும்.

சங்கீதம், சிற்பம், இயந்திரம், பூகோளம், விண்வெளி, இயற்கை பற்றிய ஆயிரக்கணக்கான நூல்கள் தமிழ்நாட்டில் பெருகிட வேண்டும்.

**சமூகப்பற்று :**

ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள். அவற்றில் ஒன்றிற்கொன்று தாழ்வில்லை. பெண்ணை இழிவு செய்பவன் தன் கண்ணைத் தானே குத்திக் கொள்வதற்குச் சமமாகும். கல்வியறிவை பெறவிடாமல் பெண்ணை வீட்டிலே அடைத்து வைப்பவன் தன் கண்ணை மூடிக் கொள்வதற்குச் சமமமாகும். இந்தச் சமூகத்தில் தொழில்கள், வணிகம், இயந்திரங்கள் யாவும் பெருக வேண்டும்.

**முடிவுரை:**

பாரதியார், இலக்கியத் தரத்துடனும் பொதுநலப் பற்றுடனும் மொழிப்பற்றுடனும் கடிதங்களை எழுதியுள்ளமை குறித்து இக்கடிதம் வாயிலாக அறிய முடிகிறது..

(அல்லது)

ஆ) **தெருக்கூத்து கலைஞர் - பெயர் ஆ. அத்தியான் :**

இவரைத் தெருக்கூத்தின் தலைமகன் என்று எங்கள் பகுதியில் கூறுகிறார்கள். அந்தளவிற்குத் தெருக்கூத்தின் அடையாளமாகத் திகழ்கிறார். இவர் அனைவரின் மனதிலும் நீங்கா இடம்பிடித்து இருக்கிறார். அவரை உள்ளூரில் காண்பது அபூர்வம். கலை கலையென்று வெளியூர் பயணம் செய்து கொண்டே இருப்பார். வீட்டில் காண முடியாது.

ஒருநாள் நானும் என் தங்கை திலகவதியும் சாலையில் நடந்து போகும்போது எதிரே வந்தார். அவரைப் பார்த்ததும் இருவரும் வணக்கம் தெரிவித்தோம். அவரும் வணக்கம் தெரிவித்தார். நலமா! என்று அன்புடன் விசாரித்தார். நாங்கள் இருவரும் தலையாட்டினோம். பேச வார்த்தைகளே வரவில்லை. அவரைப் பார்க்கும்போது பயங்கலந்த மரியாதையுடன் பிரமிப்பாக இருந்தது. அவரிடம் பேச வேண்டுமென்று நினைக்கிறோம். ஆனால் வார்த்தைகளே வரவில்லை.

அவரைப் பார்த்ததும் மனதுக்குள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தோம். எங்களை நாங்களே கிள்ளிப் பார்த்துக் கொண்டோம். அரிது அரிது அவரை நேரில் பார்ப்பது அரிது. ஆனால் நாங்கள் பார்த்துவிட்டோம். அவரிடம் நாங்கள் தயங்கி தயங்கி பேசினோம். ஆனால் அவர் எங்களிடம் மிகவும் இயல்பாக பேசி நலம் விசாரித்தார். அவருடைய வார்த்தைகள் அன்பும், அரவணைப்பும் கலந்து தூயத் தமிழில் இருந்தது. உங்களைப் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சியென்று கூறி விடை பெற்றார். எங்களுடைய ஆனந்தத்திற்கு அளவே இல்லாமல் இருந்தோம் ஒரு வார காலம்.

**47.** அ) விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

**பா வகை : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

ஆ) செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

☆☆☆

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com